முருகப்பெருமான் துணை

**மகான் சச்சிதானந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.11.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. தனதேட்டு வளம் காண
தனித்துவம் மக்கள் அடைய
வினை வென்று ஞானமாக
வேலவன் சக்திதனை அடைய
2. அடையவே அரங்க மகானின்
ஆற்றல்மிக்க புகழை பாடிட
தடையின்றி உலகோர்க்கு வெற்றி
தவராஜனால் கிட்டுமெனக் கூறி
3. கூறியே அனுகூல ஆசிதனை
குறிப்பாக சுபகிருது துலை திங்கள்
தெரிவிப்பேன் இருபான்திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் **20** ம் நாள் **06.11.2022**, ஞாயிற்றுக்கிழமை)
தேசிகனுக்கு சச்சிதானந்தர் யானும்
4. யானும் உலகநலம் பெற வேண்டி
உயர்வான அரங்கன் மார்க்க
ஞான வழிதனை உரைப்பேன்
ஞானபண்டிதனே வேதமாக
5. வேதமாக அரங்கன் தருகின்ற
வினைவெல்லும் உபதேசத்திலிருக்க
வேதமென கலியுக மக்கள்
விரும்பி வந்து ஏற்று நடக்க
6. நடக்கவே நல் நடத்தைகளும்
ஞான அறிவும் விளங்கும்
அடக்கமாய் அமைதியாய் இருந்து
ஆணவ மலம் வெல்லும் வழிவகை
7. வகையாக விளங்கி இனிதே
வாழுங்காலமே தயவு நிலை
மிகையாகி ஞானபலமும் கூடி
மேன்மைதனை அடைய நேரும்
8. நேருமை விட்டு அகலாதபடி
நீதிமான்களாக நிரப்பி
வறுமை விரட்டி மக்களிடை
வளம் கூட்டி காப்பும் கூடும்
9. கூடவே அரங்கன் தருகின்ற
குருவருளாக வரும் தீட்சை
ஈடேற்றம் தந்து மீட்பதுடன்
இனி தப்பான வழியில் செல்லா

10. செல்லா தடுத்துக் காத்து
சேவை மிக்க மாந்தர்களாக
வல்லமை தந்து யாவருமே
வரம் கூடி ஞானிகளாவர்

11. ஆவதுடன் ஞான ஆட்சிதனை
அகிலம் அடைய ஆற்றல்பட
அவரவரும் இயங்கி வெற்றிகாண்பர்
அருளிய அனுகூல ஆசி முற்றே

—சுபம்—